தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள்: 01.10.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA4827/A/2023 & SA17794/A/2023**

திரு. எம்.லியாகத்அலி -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர் /
மாவட்டக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (தனியார் பள்ளிகள்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்டக் கல்வி அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 018.

**இறுதி ஆணை**

இவ்வாணையம் 08.04.2026 அன்று விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.அ. பரமசிவம், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), மாவட்டக் கல்வி அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் 15.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி, மனுதாரர் கோரிய தகவல்களை ஆணையத்தின் ஆணைக்கிணங்க 30.05.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல்களை உரிய ஆவண நகல்களுடன் ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், பொது அதிகார அமைப்பின் சார்பாக மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.25,000/- கனரா வங்கி, ஒண்டிபுதூர் கிளை கோயமுத்தூர் வங்கி வரைவோலை எண் 956450, நாள் 02.06.2026 நாளிட்ட வரைவோலை 02.06.2026 மனுதாரருக்கு வழங்கப்பட்டது என ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2. மேலும், பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ர. பாலமுரளி, முதன்மைக் கல்வி அலுவலர், கோயம்புத்தூர், மாவட்டம் அவர்கள் 15.06.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் ஆணைக்கிணங்க தனது விசாரணை அறிக்கை நகல், அப்போதைய பொதுத் தகவல் வழங்கும் அலுவலர். முதன்மைக்கல்வி அலுவலகம், திருமதி.இரா.பூங்கோதை என்பவரின் எழுத்து மூல விளக்கம். அப்போதைய பொதுத் தகவல் வழங்கும் அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்) திரு.கே.கே.முருகேசன் என்பவரின் எழுத்து மூல

விளக்கம். தற்போதைய பொதுத் தகவல் வழங்கும் அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்) திரு.அ.பரமசிவம் என்பவரின் எழுத்து மூல விளக்கம், மனுதாரரால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி கோரப்பட்ட தகவல் தற்போதைய பொதுத் தகவல் வழங்கும் அலுவலரால் வழங்கப்பட்டமைக்கான 30.05.2026 நாளிட்ட கடித நகல் மற்றும் பதிவஞ்சல் மூலம் மனுதாரர் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை, ரூ.25000/- இழப்பீட்டிற்குரிய வங்கி வரைவு அதனை மனுதாரர் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை மற்றும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்32790/டி1/இ4/2026 நாள்:05.06.2026 நகல் ஆகியவற்றினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், திரு. இரா.பூபதி, அப்போதைய முதன்மைக் கல்வி அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் தனது 15.06.2026 நாளிட்ட எழுத்து மூல விளக்கத்தினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

3. மேற்காண் ஆணையத்தின் உத்தரவினை ஏற்று, முனைவர் சுகன்யா, இரண்டாம் மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை அவர்கள் ந.க.எண் 04303/உ2/2026, நாள் 01.06.2026 நாளிட்ட செயல்முறைகளின்படி அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும்(தனியார் பள்ளிகள்) உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும், அனைத்து மாவட்ட ஆய்வு அலுவலர்களான மாவட்டக்கல்வி அலுவலர்களிடமிருந்து (தனியார் பள்ளிகள்) அனைத்துவகை பள்ளிகளிலும் 2026-2027ஆம் கல்வியாண்டில் உரிய கட்டண விவரங்கள் பெற்றோர்கள் அறியும் வண்ணம் அந்தந்த பள்ளிகளின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டமைக்கு உறுதிமொழிச்சான்றும், மாவட்ட வாரியாக பள்ளிகள் தங்களது அறிவிப்புப் பலகையில் வைக்கப்பட்டுள்ள கட்டண விவரங்கள் சார்ந்த புகைப்பட விவரங்களையும், இணைத்து இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்ததன் அடிப்படையிலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்களின் எழுத்து மூல விளக்கங்கள் இவ்வாணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA4827/A/2023 & SA17794/A/2023</u>**

**பெறுநர்**

***முனைவர்.S. சுகன்யா,***
***தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்,***
***இயக்குநர் (தனியார் பள்ளிகள்)***
***பள்ளிக் கல்வி இயக்குநரகம்,***
***DPI Complex, கல்லூரி சாலை,***
***சென்னை - 600 006.***

**<u>வழக்கு எண். SA4827/A/2023 & SA17794/A/2023</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
மாவட்டக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (தனியார் பள்ளிகள்),
மாவட்டக் கல்வி அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 018.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்,
மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு. எம்.லியாகத்அலி
A/18, சேரன்மாநகர்,
சேரன்மாநகர் அஞ்சல்,
கோயம்புத்தூர் - 641051

Copy to file
JE/PA 01.10.2026